**தலைப்பு 04 – உயர் நீதிமன்ற நீதிபதிகள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 04 – உயர் நீதிமன்ற நீதிபதிகளின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஒக்தோபர் 13 ஆம் திகதி உச்ச நீதிமன்றப் பதிவாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புகள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 723.50 மில்லியனாக இருந்ததுடன், இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 159.14 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 564.36 மில்லியன் அதாவது 78.00 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 132.20 | 119.41 | 12.79 | 9.67 |
| மூலதனம் | 591.30 | 39.73 | 551.57 | 93.28 |
| மொத்தம் | 723.50 | 159.14 | 564.36 | 78.00 |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

நீதிமன்றத்திற்குரிய 00401 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 3.12 | 0.20 | 0.60 | 0.82 | 12.00 | 0.81 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

உயர் நீதிமன்ற நீதிபதிகளின் கீழுள்ள 7002/0000/00/0390/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 403,381 ஆகும்.

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

உயர் நீதிமன்ற நீதிபதிகளின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 புத்தகங்களும் பதிவேடுகளும் பேணப்படாமை

உயர் நீதிமன்ற நீதிபதிகளின் தலைப்பின் கீழ் காண்பிக்கப்படும் நிலையான சொத்துப் பதிவேடுகள் முறையாகவும், நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | நட்டம் மற்றும் இழப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |

**3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இண்மை**

மீளாய்வாண்டிற்குரிய ரூபா 27,387 பெறுமதியான கொடுப்பனவு உறுதிச்சீட்டொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.3.1 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டின் போது உயர் நீதிமன்ற நீதிபதிகளின் அலுவலகங்களில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.3.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் உயர் நீதிமன்ற நீதிபதிகள் என்ற தலைப்பின் கீழ் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், உரிய செயலாற்றல் அறிக்கை 2016 செப்தெம்பர் மாதம் வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்குரிய மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் வழங்கப்பட்ட ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 757(2)(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்**

**செயற்திட்டங்களை பூர்த்திசெய்யாது கைவிடல்**

உயர் நீதிமன்ற நீதிபதிகளின் தலைப்பின் கீழ் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் 2014 | 2015 | ஆரம்பிக்கப்பட்ட திகதி | 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செலவினம் | கைவிடப்பட்டமைக்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | | ரூபா | |
| நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகள் | 200,000,000 | 550,000,000 | 2014 | 36,485,612 | இந்த செலவினத் தலைப்பின் கீழ் நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்ட நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நீதி அமைச்சின் மூலம் நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும், அதற்காக அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட ரூபா 525 மில்லியன் நிதி ஏற்பாடு உச்ச அளவில் பயன்படுத்தப்படாமை இந்த நிலைக்கு காரணமாக இருந்தது. |

## 3.6 செயலாற்றல்

உயர் நீதிமன்ற நீதிபதிகள், உச்ச நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் என்ற இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது. 2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் நிறுவனத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) உச்ச நீதிமன்றத்தின் செயலாற்றல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியமைப்பின் மூலம் உச்ச நீதிமன்றத்தின் அடிப்படை உரிமைகள் தொடர்பான நீதிமன்ற அதிகாரம், இறுதி மேன்முறையீட்டு நீதிமன்ற அதிகாரம், மதியுரை நீதிமன்ற அதிகாரம், தேர்தல் முறையீடு (சனாதிபதித் தேர்தல்) தொடர்பான நீதிமன்ற அதிகாரம் யாதேனும் ஒரு முறையில் அல்லது பாராளுமன்ற வரப்பிரசாதங்களை மீறுதல் தொடர்பான நீதிமன்ற அதிகாரம் மற்றும் பாராளுமன்றம் சட்டத்தினால் தீர்மானிக்கக்கூடிய வேறு காரணமொன்று தொடர்பாக நீதிமன்ற அதிகாரத்தை வழங்குகின்றது.

உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் பிரதான பணியாக உச்ச நீதீமன்றத்தில் தொடுக்கப்படுகின்ற வழக்குகளை சட்டத்தின் பிரகாரம் தீர்வினை வழங்குதலாகும். மீளாய்வாண்டின் போது வழக்கினைத் தீர்த்தலின் செயலாற்றல் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வழக்கின் வகை | 2015 சனவரி 01 இல் உள்ளவாறான தீர்வுகாண்பதற்குள்ள எண்ணிக்கை | 2015 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2015 ஆம் ஆண்டின் போது தீர்வு காண்பதற்குள்ள வழக்குகளின் எண்ணிக்கை | 2015 ஆம் ஆண்டின் போது கோரிக்கைகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்ட எண்ணிக்கை | 2015 ஆம் ஆண்டின் போது முடிவுறுத்தப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வுகாண்பதற்குள்ள வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| அடிப்படை உரிமை விண்ணப்பங்கள் | 738 | 474 | 1,212 | 27 | 239 | 946 |
| விஷேட அனுமதி விண்ணப்பங்கள் | 336 | 280 | 616 | - | 85 | 531 |
| பாராளுமன்றச் சட்ட வரைவு தொடர்பான உச்ச நீதி மன்றத்தின் கட்டளை | - | 22 | 22 | - | 22 | - |
| மேன்முறையீட்டு வழக்குகள் | 356 | 154 | 510 | - | 109 | 401 |
| வணிக மேல் நீதிமன்ற மேன்முறையீட்டு வழக்கு | 224 | 36 | 260 | - | 50 | 210 |
| உச்ச நீதிமன்ற அனுமதி விண்ணப்பங்கள் | 146 | 77 | 223 | 14 | 47 | 162 |
| ரீட் விண்ணப்பங்கள் | 2 | 5 | 7 | - | 2 | 5 |
| மாகாணங்களுக்கிடையிலான மேல்நீதிமன்ற மேன் முறையீட்டு வழக்குகள் | 1,176 | 450 | 1,626 | 100 | 226 | 1,300 |
| மீள் திருத்த வழக்குகள் | 5 | 7 | 12 | - | 1 | 11 |
| அரசியலமைப்பின் கருத்தை வெளிப்படுத்துதல் தொடர்பான வழக்கு | 1 | - | 1 | - | - | 1 |
| நானாவித வழக்குகள் | 9 | 1 | 10 | - | 1 | 9 |
| SC TAB APPEAL | - | 1 | 1 | - | - | 1 |
| SC SPECIAL | 13 | - | 13 | - | 1 | 12 |
| மொத்தம் | 3,006 | 1,507 | 4,513 | 141 | 783 | 3,589 |

## (ஆ) மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் செயலாற்றல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினால் தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டு நீதி மன்றத்திற்கு ஆரம்ப சந்தர்ப்பத்தில் நீதி மன்றங்களில் தொழிலாளர் நியாய சபைகளில் மற்றும் ஏனைய நியதிச்சட்ட சபைகளின் தீர்வுகள் தொடர்பான மேன்முறையீடு மற்றும் மீளமைப்புக்களில் நீதிமன்ற அதிகாரம் உள்ளது. மேலும் ரீட் கட்டளைச் சட்டம் தொடர்பாகவும் நீதிமன்ற அதிகாரத்தையும் கொண்டுள்ளது. 2002 இன் 25 ஆம் இலக்க குற்றவியல் விடயங்களின் போது புரிந்துணர்வான ஒத்துழைப்பை வழங்கும் அதிகாரச்சட்டம் மற்றும் 2000 இன் 39 ஆம் இலக்க சிவில் மற்றும் வணிக விடயங்களின் போது புரிந்துணர்வான ஒத்துழைப்பை வழங்கும் அதிகாரச்சட்டங்களில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக தேவையான கட்டளைகள் மற்றும் ஏற்பாடுகளை வழங்குதல், தேர்தல் முறைப்பாடுகளை விசாரணை செய்தலும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் மேற்கொள்ளப்படுவதுடன், எந்தவொரு ஆரம்ப சந்தர்ப்பத்திலும் நீதிமன்றத்தில் அல்லது தொழிலாளர் நியாய சபை அல்லது ஏனைய நிறுவனமொன்றில் வழக்கு அறிக்கையொன்றை மேற்பார்வை செய்வதற்கும், பரீட்சிப்பதற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு பலமும் அதிகாரமும் உள்ளது. மீளாய்வாண்டின் போது வழக்கு தீர்த்தல்களின் செயலாற்றல் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வழக்கின் வகை | 2015 சனவரி 01 இல் உள்ளவாறு தீர்வு காண்பதற்குள்ள எண்ணிக்கை | 2015 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2015 ஆம் ஆண்டின் போது தீர்வுகாண்பதற்கு உள்ள வழக்குகளின் எண்ணிக்கை | 2015 ஆம் ஆண்டின் போது தீர்வு காணப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு காண்பதற்குள்ள வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| ரீட் விண்ணப்பங்கள் | 1,203 | 561 | 1,764 | 340 | 1,424 |
| மேல் நீதிமன்ற மேன் முறையீடு | | | | | |
| (குற்றம்) | 855 | 274 | 1,129 | 254 | 875 |
| (றெம்) | 2 | - | 2 | - | 2 |
| மாகாணங்களுக்கிடையிலான மேல் நீதிமன்ற மேன் முறையீடு | 1,117 | 206 | 1,323 | 263 | 1,060 |
| சிவில் மேன் முறையீடு | 981 | - | 981 | 208 | 773 |
| மாகாணங்களுக்கிடையே மேல் நீதி மன்ற திருத்த விண்ணப்பங்கள் | 282 | 172 | 454 | 143 | 311 |
| மீள் திருத்த (சிவில்) மற்றும் மேன் முறையீட்டு அனுமதி விண்ணப்பங்கள் | 84 | 20 | 104 | 40 | 64 |
| ஏனைய விண்ணப்பங்கள் | 139 | 80 | 219 | 47 | 172 |
| மொத்தம் | 4,663 | 1,313 | 5,976 | 1,295 | 4,681 |

### 3.7 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறு இருந்தது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 23 | 23 |
| மொத்தம் | 23 | 23 |